புதுவை அரசு
முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம், புதுச்சேரி
பெருந்தலைவர் காமராஜர் கல்வித்துறை வளாகம்
ஓப்பந்தப் புள்ளி மற்றும் ஏல அறிவிப்பு

எண்:567/CEO/DIS-IV/A1/2020/213 தேதி: 19-6-2020

புதுவை அரசு, பள்ளி கல்வி இயக்ககம் வட்டம் நான்கின் ஒதியம்பட்டு அரசு தொடக்கப்பள்ளியிலுள்ள தென்னை மற்றும் மா மரங்களின் மகசூல் அனுபவ/குத்தகை உரிமத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

மா - 3 மரங்கள்
தென்னை – 99 மரங்கள்

குத்தகைக் காலம்: ஒரு வருடம்
(ஏலம் எடுத்த நாள் முதல்)

<u>விதிமுறைகள்</u>

1. அரக்கினால் முத்திரையிடப்பட்ட உறையின்மேல் தென்னை மற்றும் மாமரங்களின் மகசூலுக்கான ஒப்பந்தப்புள்ளி எனக் குறிப்பிட்டு, முதன்மைக் கல்வி அதிகாரி, பள்ளி கல்வி இயக்ககம், புதுச்சேரி என்ற முகவரிக்கு 26-6-20 அன்று மாலை 3.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் யாவும் அன்றைய தினமே மாலை 4.00 மணிக்கு நேரில் வரும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் முதன்மை கல்வி அதிகாரியால் அவரது அலுவலகத்தில் பிரிக்கப்படும். மேற்கண்ட நாள் அரசால் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அடுத்து வரும் அலுவலக நாளில் அதே நேரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுத் திறக்கப்படும். அப்படித் திறக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகளில் அதிகத் தொகையாக கோரப்படும் ஒப்பந்தாரருக்கே குத்தகை/ஏலம் விடப்படும்.
2. ஒப்பந்த/ஏல நிகழ்ச்சியில் பங்குபெறும் ஒப்பந்ததாரர்கள் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) முன்காப்புத் தொகையாக ஒப்பந்தப் புள்ளி உறை சமர்ப்பிக்கும்போது வரைவோலை (By way of Demand Draft) இணைக்கப்பட வேண்டும். The D.D. Drawn in favour of "Drawing and Disbursing Officer o/o the Chief Education Officer, Pondy"
3. வெற்றி பெறாத ஒப்பந்ததாரர்களின் முன்காப்புத் தொகை வரைவோலை ஏலம் முடிந்தவுடன் திருப்பித் தரப்படும்.
4. மேலே குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் நிராகரிக்கப்படும்.
5. யாதொரு காரணமுமின்றி எந்தவொரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு முழு உரிமை உண்டு.
6. ஒப்பந்த நிகழ்ச்சி முடிந்தபின் குத்தகை விடப்பட்ட மரங்களின் மகசூல் பற்றி இந்த அலுவலகம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்காது. குத்தகைக் காலம் முடிந்தவுடன் அனைத்து மரங்களையும் பொறுப்பான அலுவலரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
7. ஒப்பந்தப் புள்ளியைப் பெறுவதற்கான காலக்கெடு முடிவடைந்த பின்பும், ஒப்பந்த முறை முடிவு அறிவித்த பின்பும், அதனை திரும்பப் பெறுவது ஏற்க இயலாது.
8. மேற்கண்ட 99 தென்னை மரங்கள், 3 மாமரங்கள், ஆகியவற்றின் மகசூல் பொருட்களான தேங்காய், மாங்காய் ஆகியவற்றை குத்தகைத்தார் அனுபவித்துக் கொள்ள உரிமை உண்டு. எக்காரணத்தைக் கொண்டும் பசுமையான தென்னை மட்டைகளையோ, மாங்கிளைகளையோ வெட்டக் கூடாது.
9. மேற்கூறிய தென்னை மரங்களிலிருந்து எக்காரணத்தைக் கொண்டும் கள்(மது) இறக்கக் கூடாது
10. குத்தகைதார் மரங்களுக்குத் தேவையான பாதுபாப்புக் கருதி தாங்களே காவல் போட்டுக் கொள்ள வேண்டும்.
11. மேலே குறிப்பிட்ட மரங்களை அரசினரால் வெட்ட நேரிட்டால் அதுசமயம் குத்தகைதார் மறுப்பு ஏதும் கூறாமல் மரத்தை வெட்ட அனுமதிக்க வேண்டும்.
12. அவ்வாறு வெட்டப்பட்ட மரங்களுக்கு ஈட்டுத் தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது.
13. குத்தகையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தானாகவே ரத்து செய்ய நேர்ந்தால் அதனால் ஏற்படும் இழப்பிற்கு துறை பொறுப்பேற்காது.
14. இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் குத்தகைக்கு விடப்படும் மரங்களை வேலை நாட்களில் பார்வையிடலாம்.
15. ஒப்பந்தாரர் எடுத்த முழுத் தொகையையும் அதற்குண்டான சரக்கு மற்றும் சேவை வரியையும் (GST) உடனடியாகச் செலுத்திட வேண்டும். தவறினால் தான் செலுத்திய முன்காப்புத் தொகையை இழக்க நேரிடும்.
16. இந்த குத்தகை/ஏலம் சம்பந்தமாக, கீழே கையொப்பமிட்டுள்ளவரின் முடிவே இறுதியானது.

K. Meenakshisundaram 19/6

CHIEF EDUCATIONAL OFFICER
PUDUCHERRY
(க.மீனாட்சிசுந்தரம்)
முதன்மைக் கல்வி அதிகாரி
புதுச்சேரி.

நகல் பெறுபவர்:

1. தலைமையாசிரியர்,
அரசு தொடக்கப்பள்ளி, ஒதியம்பட்டு.
2. மின்னணு தரவு செயலாக்கம்,
பள்ளி கல்வி இயக்ககம், புதுச்சேரி.